# IN THE COURT OF SPECIAL COURT FOR

# TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.

## SPECIAL SESSIONS CASE NO. 10 OF 2021

## Deposition of Witness for : PW-2 (LW-2)

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.ரஞ்சித் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28-07-2026**

A1 to A5 present.

**முதல் விசாரணை –**

நான் மேனலூர் கிராமத்தில் குடியிருக்கிறேன் . நான் சட்ட கல்லூரியில் படித்துகொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது . கமலக்கண்ணன் என்னுடைய தாய் மாமா. சுமார் ஐந்து வருடத்திற்கு முன்பு என்னுடைய தாய் மாமா கமலக்கண்ணனுக்கு அடிப்பட்டுவிட்டதாக போன் செய்தார்கள். நான் மருத்துமனைக்கு சென்று பார்த்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது . இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் போலிஸ் விசாரணையில் 17.05.2020 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் எங்கள் காலனியை சேர்ந்த அரவிந்த் , சதிஷ்குமார், பன்னீர், சத்தியா ஆகியோர் எங்கள் ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள விளையாட்டு மைதானத்தில் இருந்தபொழுது என்னுடைய மாமா முறையான கமலக்கண்ணன் என்பவர் விளையாட்டு மைதானத்தில் வந்துக்கொண்டிருந்தபோது சுருட்டல் கிராமத்தை சேர்ந்த மணி என்பவரின் மகன்களான மோகன்ராஜ் , ஜெய்சங்கர் ஆகியோர் கமலக்கண்ணனை வழிமடக்கி ங்கோத்தா பற தேவிடியா பசங்களா எவன்டா என் மச்சான் நவீன்குமார் செல்போனை டாஸ்மாக் கடையிடம் பிடிங்கி உடைத்தது என்று அசிங்கமாக பேசிக்கொண்ட இங்க என்னடா நடந்து போற என மோகன்ராஜ் கேட்டபொழுது இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும் உடனே நாங்கள் அவர்களை விலக்விட்டோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் அதுபோல் நடக்கவில்லை. அப்போது மோகன்ராஜ் கையில் வைத்திருந்த இரும்பு ராடால் இத்தோடு செத்துபோடா என்று மாமா கமலக்கண்ணனின் இடது பக்க முன்தலையில் அடித்தான் என்றும், அதனால் தலையில் இரத்த காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. ஜெய்சங்கர் உருட்டுகட்டையால் கமலக்கண்ணனின் வலது கை மணிக்கட்டு, வலதுகால் முட்டியில் அடித்தான் என்றும் , அவர்களோடு வந்த நவீன்குமார் அவரின் அம்மா செல்வி , அப்பா சேரிமுத்து அனைவரும் கமலக்கண்ணனை கல்லால் உடல் முழுவதும் அடித்து இத்தோடு செத்துபோடா இனிமே பிராந்திகடையில எவனாவது எங்ககூட சண்டைக்கு வந்தீங்கனா உங்க எல்லோரையும் அடித்து சாகடித்துவிடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அடிப்பட்ட கமலக்கண்ணனை அக்காவின் மாமா வெங்கடேசன் என்பவர் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தார் என்றும் , இது சம்மந்தமாக செய்யார் டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள் என்றால் நான் அடிப்பட்டதாக கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் . நான் நடந்த சம்பவங்களை போலிஸ் விசாரித்தபொழுது சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை .

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA
Digitally signed by V SUTHA
Date: 2026.07.28 18:51:03 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL**
**OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**

**IN THE COURT OF SPECIAL COURT FOR**

**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**

**SPECIAL SESSIONS CASE NO. 10 OF 2021**

**Deposition of Witness for : PW-3 (LW-4)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.சதிஷ்குமார் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28-07-2026**

A1 to A5 present.

**முதல் விசாரணை –**

நான் மேனலூர் கிராமத்தில் குடியிருக்கிறேன் . கம்பெனியில் வேலை செய்கிறேன். கொரோனா காலகட்டத்தில் கமலக்கண்ணனுக்கு அடிப்பட்டதாக தெரிந்து மருத்துமனைக்கு சென்று பார்த்தேன் . வேறு எதுவும் எனக்கு தெரியாது . ஆஜர் எதிரிகளை தெரியாது . இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் போலிஸ் விசாரணையில் 17.05.2020 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் , என்னுடைய தம்பி அரவிந்த், பன்னீர், சத்தியா ஆகியோர் எங்கள் ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள விளையாட்டு மைதானத்தில் இருந்தபொழுது என்னுடைய மாமா முறையான கமலக்கண்ணன் என்பவர் விளையாட்டு மைதானத்தில் வந்துக்கொண்டிருந்தபோது சுருட்டல் கிராமத்தை சேர்ந்த மணி என்பவரின் மகன்களான மோகன்ராஜ், ஜெய்சங்கர் ஆகியோர் கமலக்கண்ணனை வழிமடக்கி ங்கோத்தா பற தேவிடியா பசங்களா எவன்டா என் மச்சான் நவீன்குமார் செல்போனை டாஸ்மாக் கடையிடம் பிடிங்கி உடைத்தது என்று அசிங்கமாக பேசிக்கொண்ட இங்க என்னடா நடந்து போற என மோகன்ராஜ் கேட்டபொழுது இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும் உடனே நாங்கள் அவர்களை விலக்விட்டோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் அந்த இடத்தில் நான் இல்லை . அப்போது மோகன்ராஜ் கையில் வைத்திருந்த இரும்பு ராடால் இத்தோடு செத்துபோடா என்று மாமா கமலக்கண்ணனின் இடது பக்க முன்தலையில் அடித்தான் என்றும் , அதனால் தலையில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும் ஜெய்சங்கர் உருட்டுகட்டையால் கமலக்கண்ணனின் வலது கை மணிக்கட்டு , வலதுகால் முட்டியில் அடித்தான் என்றும், அவர்களோடு வந்த நவீன்குமார் அவரின் அம்மா செல்வி , அப்பா சேரிமுத்து அனைவரும் கமலக்கண்ணனை கல்லால் உடல் முழுவதும் அடித்து இத்தோடு செத்துபோடா இனிமே பிராந்திகடையில எவனாவது எங்ககூட சண்டைக்கு வந்தீங்கனா உங்க எல்லோரையும் அடித்து சாகடித்துவிடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது நான் அங்கு இல்லை . அடிப்பட்ட கமலக்கண்ணனை அக்காவின் மாமா வெங்கடேசன் என்பவர் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தார் என்றும் , இது சம்மந்தமாக செய்யார் டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை . நான் நடந்த சம்பவங்களை போலிஸ் விசாரித்தபொழுது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை .

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA Digitally signed by V SUTHA Date: 2026.07.28 18:51:11 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**